DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ரவி சங்கர நாராயணன் |
| Father Name | : | கோபால் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2025.

(6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டனர் )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் 30.06.2001ம் தேதியன்று மதுரை நீதித்துறை நடுவர் எண்.5 நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் மதியம் 02.15 மணியளவில் ஏதோ சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். அப்போது சுமார் 4, 5 நபர்கள் வேகமாக வந்து எங்கள் நீதிமன்ற ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் ஆஜர் எதிரிகளை பார்க்கவில்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

சம்பவ தினத்தன்று மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் நடுப்புற பகுதியில் சுமார் 500, 600 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.